5.6 சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. ஒரு கிலோகிராமில் எத்தனை கிராம்கள் உள்ளன?

   அ) 10 கிராம் ஆ) 100 கிராம் இ) 1000 கிராம் ஈ) 500 கிராம்

2. 2000 கிராம் என்பது எத்தனை கிலோகிராமிற்குச் சமம்?

   அ) 2 கிராம் ஆ) 2 கிலோகிராம்

   இ) 2 சென்டிமீட்டர் ஈ) 2 மீட்டர்

3. 3 கிலோகிராமில் எத்தனை கிராம்கள் உள்ளன?

   அ) 3 கிராம் ஆ) 30 கிராம் இ) 300 கிராம் ஈ) 3000 கிராம்

4. கொடுக்கப்பட்டுள்ளனவற்றுள் பொருந்தாதது எது?

   அ) 1 கிலோகிராம் ஆ) 1 கிராம் இ) 1மீட்டர் ஈ) 100 கிராம்

5. கிலோகிராம் என்பதன் சுருங்கிய வடிவம் எது?

   அ) கி ஆ) கி.கி இ) மீ ஈ) செ.மீ

5.7 கோடிட்ட இடங்களை நிரப்புக.

i) 3 கி.கி = _____ கிராம்

ii) 2000 கிராம் = _____ கி.கி

iii) 5 கி.கி = _____ கிராம்

iv) 9000 கி = _____ கி.கி

v) 8 கிலோகிராமில் _____ கிராம்கள் உள்ளன.

vi) கிராம் என்பதன் சுருங்கிய வடிவம் _____

5.8 சரியான விடையைத் தேர்ந்தெடு.

1) சிவா 2 கி.கி ஆப்பிள் வாங்கினான். ரமணி 2000 கி ஆப்பிள் வாங்கினாள். இச்சூழலுடன் தொடர்புடைய சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்க.

   அ) சிவா ரமணியை விட அதிக எடைக்கு ஆப்பிள் வாங்கினான்.

   ஆ) ரமணி சிவாவை விட அதிக எடைக்கு ஆப்பிள் வாங்கினாள்.

   இ) இருவரும் சமமான எடையில் ஆப்பிள்களை வாங்கினர்.

   ஈ) எடை போட்டு பார்க்காமல் கூற இயலாது.

2) மோகனா 5 கி.கி சர்க்கரை வாங்க கடைக்குச் சென்றாள். பின்வரும் எந்தப் *பாக்கெட்டை* அவள் வாங்க வேண்டும்?

அ) ஆ) இ) ஈ)

3) ராதா தான் வாங்கிய 2000 கி எடையுள்ள மாதுளம்பழத்தின் எடையைச் சரிபார்க்க வேண்டுமெனில் கீழ்க்காணும் எந்த எடைக்கல்லைப் பயன்படுத்தி சரிபார்க்க முடியும்?

அ) ஆ) இ) ஈ)

LIVEWORKSHEETS